பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 31

வெள்ளிக்கிழமை
27 டிசெம்பர் 2024

மார்கழி 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## மார்கழி இசைவிழா இன்று!

யாழ். - இந்தியத் துணைத்தூதரகம், நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக் கூடல் மற்றும் ☞10

## வடக்கின் சுகாதாரத்துறையில் மூலோபாயத் திட்டம் இல்லை

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஒப்புதல்



யாழ்ப்பாணம், டிசெ. 27
வடக்கு மாகாணத்தின் சுகாதாரத் துறை தொடர்பில், மூலோபாயத் திட்டங்கள் இல்லை என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.
கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, 'தெற்கில் ஒவ்வொரு திணைக்களங் ☞10

## வடக்கு - கிழக்குத் தொடர்பில் மிகவும் அவதானமாக இருங்கள்

### காடு மாறினும் புலிகளின் புள்ளிகள் மாறாது
### சுமணரத்ன தேரர் அரசுக்கு எச்சரிக்கை



யாழ்ப்பாணம், டிசெ. 27
வடக்கு - கிழக்கில் உள்ள இராணுவப் பாதுகாப்பு அரண்கள் நீக்கப்பட்டுள்ளன. இவ்வாறு வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தைத் தவறாக பயன்படுத்தி சூழ்ச்சி நடக்கலாம். எனவே, பாதுகாப்புத் தரப்புகள் விழிப்பாக இருக்க வேண்டும் என்று சுமணரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மஹிந்த ராஜபக்சவின் ☞10

### கிளிநொச்சி நகரில் மட்டும்

# 36 வீதமான காணிகள் இராணுவத்தினர் வசம்!

### விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஒருங்கிணைப்புக் குழுவில் அழுத்தம்

**கிளிநொச்சி, டிசெம்பர் 27**

**கிளிநொச்சி மாவட்டத்தின் நகரத் திட்டமிடலுக்குரிய காணிகளில் 36 வீதமானவை தொடர்ந்தும் இராணுவத்தின் பிடியில் உள்ளன. இது மாவட்டத்தின் அபிவிருத்தியில் பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்துகின்றது என்று கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.** ☞10

## காணி உறுதி வழங்கலை விரைவுபடுத்த நடவடிக்கை

கிளிநொச்சி, டிசெ. 27
கிளிநொச்சி மாவட்டத்தில் பிணக்குகள் அற்ற காணிகளுக்கு உறுதிகளை விரைந்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கிளிநொச்சி பதில் மாவட்டச் செயலர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.
கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று நடை ☞10

### காணி விடுவிப்புக்கு ஏதுவாக

## தனியார் காணிகளின் விவரங்களைத் தருக

கிளிநொச்சி, டிசெ. 27
கிளிநொச்சி மாவட்டத்தில் படையினர் மற்றும் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் காணப்படும் தனியார் காணிகளின் விவரங்களை வழங்குமாறு படையினரால் ☞10

## மறைந்தார் மன்மோகன் சிங்



புதுடில்லி, டிசெ. 27
இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் (வயது-92) நேற்றுக் காலமானார்.
திடீர் உடல்நலக்குறைவு காரணமாக முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் நேற்று மாலை டெல்லியில் உள்ள எய்மஸ் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். இதைத் தொடர்ந்து ☞10

## வவுனியாவில் விபத்து; இளைஞர் உயிரிழப்பு!



வவுனியா, டிசெ. 27
வவுனியா கோவில்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் அராலி பகுதியைச் சேர்ந்த ப.சஞ்சயன் (வயது-22) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்த ☞10

## சுனாமியால் உயிரிழந்தோருக்கு நேற்று உணர்வுபூர்வ அஞ்சலி!

2004ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி இலங்கையில் ஏற்பட்ட சுனாமிப் பேரிடரால் உயிரிழந்தோருக்கு நேற்று உணர்வுபூர்வ அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியிலும், தமிழர் தாயகத்திலும் இந்த அஞ்சலி நிகழ்வுகள் பரவலாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.
(தொடர்புடைய செய்திகள் மற்றும் படங்கள் பக்கம் 06, 07)

## போர் நினைவுச்சின்னம் அகற்றப்பட வேண்டும்!

கிளிநொச்சி, டிசெ. 27
கிளிநொச்சி டிப்போச் சந்தியிலுள்ள போர் நினைவுச்சின்னம் அகற்றப்பட்டு அந்த இடத்தில் கலாசார மண்டபம் அமைக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் ☞10

## ஊடகவியலாளர் மீது நேற்றுத் தாக்குதல்!

கிளிநொச்சி, டிசெ. 27
கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் தமிழ்ச்செல்வன் மீது, நேற்றுமாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ☞10

### முச்சந்தி முரளி



'திட்டங்கள் இல்லாட்டி சனங்கள் திட்டிறமாதிரித்தானே அலுவல்கள் நடக்கும் கண்டியளோ'

## காய்ச்சல் காரணமாக குடும்பத்தலைவர் பலி » 10

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடைக்கு முன்னரே நெல்லுக்கு விலையை நிர்ணயிக்க வேண்டும்!

## இயற்கையின் நண்பர்கள் இயக்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 27

**நெல் மற்றும் அரிசிக்கான விலையை அறுவடைக்கு முன்னராகவே நிர்ணயம் செய்யப்படவேண்டும் என இயற்கையின் நண்பர்கள் இயக்கம் வலியுறுத்தியுள்ளது.**

இதுதொடர்பில் இயற்கையின் நண்பர்கள் இயக்கம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: வடக்கு மாகாணத்தில் விளையும் நெல்லில் கணிசமான அளவைத் தனியார்துறை குறிப்பாக தென்பகுதி மற்றும் உள்ளூர் வர்த்தகர்களே கொள்வனவு செய்துவருகின்றனர்.

வடக்கு மாகாணத்தின் மக்களின் நுகர்வுத் தேவையைவிட ஏறத்தாழ மூன்று மடங்கு நெல் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படுகின்றது. ஆனாலும் தென்னிலங்கையைச் சேர்ந்த மொத்த வியாபாரிகள் நெல்லைக் கொள்வனவு செய்துகொண்டு சென்று பியர் உற்பத்திக்கு பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு விற்று மிகுதியையே மீண்டும் வடபகுதிக்கு அதிக விலைக்கு விற்பனை செய்கின்றார்கள். நெல்லை வயலில் அறுவடை செய்யும்போதே கொள்வனவு செய்வதால் நெல்லில் இருக்கும் ஈரலிப்பைக் காரணம் காட்டி நெல்லுக்கு உரிய விலையைக் கொடுப்பதற்கும் கொள்வனவாளர்கள் தயங்குகின்றனர்.

எனவே நெல் மற்றும் அரிசிக்கான விலையை அறுவடைக்கு முன்னராகவே நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

அதேவேளை வடமாகாணத்தில் அரிசித் தட்டுப்பாடு இல்லாத நிலையைப் பேணுவதற்கும், மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையிலும், நெல் உற்பத்தியாளர்களுக்கு உரிய விலை கிடைப்பதை உறுதிசெய்யும் வகையிலும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நெல்லை முழுமையாகக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - என்றுள்ளது. (ச-20)



# வடக்கு - கிழக்கை கட்டியெழுப்புவதற்கு

## சுவிஸில் சமூகக் கட்டமைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 27

இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பும் நோக்கில் சுவிஸ் நாட்டில் வசிக்கும் தமிழ் வர்த்தகர்கள் சமூக ஆர்வலர்களால் எதிர்காலத்துக்காக ஒன்றிணைவோம் எனும் நோக்கில் சமூகக் கட்டமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

சமூக செயற்பாட்டாளர் சி.பிரபாகரனின் ஒருங்கமைப்பில் மூத்த ஊடகவியலாளர் ஞா.குகநாதன் தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் சுவிஸ் நாட்டிலுள்ள தமிழ் வர்த்தகர்களும் சமூக ஆர்வலர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது வடக்கு - கிழக்குப் பகுதிகளில் முதலீடுகளை மேற்கொள்ளல், மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தல் , சுவிஸ் அரசாங்கத்தின் அங்கீகாரம் பெறல் போன்ற விடயங்களும் ஆராயப்பட்டன.

இலங்கையிலிருந்து சமூக ஆர்வலர் எஸ்.செல்வின் 'சூம்' தொழில் நுட்பத்தின் ஊடாக இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமைகளையும், அரசியல் நிலைவரங்களையும் எடுத்துரைத்தார்.

அமைப்பின் தலைவராக இளையதம்பி சிறிதாஸ், செயலாளராக இராசமாணிக்கம் ரவிந்திரன், உட்பட நிர்வாகக்குழு உறுப்பினர்களும், போசகராக ஊடகவியலாளர் ஞானசுந்தரம் குகநாதன், ஒருங்கிணைப்பாளராக சி.பிரபாகரன் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர். (ச-இ)

# அநுரவின் வெற்றி

## ரணிலுக்கே பெருமை

கொழும்பு, டிசெ. 27

அநுர அரசாங்கத்தில் பொருளாதார மீட்சிக்காக எடுக்கப்படும் திட்டங்கள் வெற்றி பெற்றால் அதன் பெருமை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்கவையே சேரவேண்டும். ஏனெனில் எவ்வித மாற்றமுமின்றி அந்தப் பொருளாதாரக் கொள்கையை முழுமையாகச் செயற்படுத்துகிறார் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க.

- இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். தேசிய மக்கள் சக்தி தேர்தல் காலத்தில் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் பொய்யாக்கப்பட்டுள்ளன.

ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதாரக் கொள்கையை கடுமையாக விமர்சித்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தற்போது அதனை முழுமையாக நடைமுறைப்படுத்தியுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# ஊடகங்களின் அனுமதியை பறித்தார் அமைச்சர்

யாழ்ப்பாணம், டிசெ. 27

இனிமேல் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் ஊடகங்களுக்கு அனுமதி இல்லை என்று யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றபோது நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கும் தம்பிராசா மற்றும் பனை அபிவிருத்தி சபையின் தலைவர் சகாதேவன் ஆகியோருக்கு இடையே கருத்து மோதல் ஏற்பட்டது.

இதன்போதே அமைச்சர் சந்திரசேகர், இனிமேல் பொதுமக்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்கேற்க அனுமதியில்லை - என்றார். (ச-26-125)

# பிரதமருக்கு எதிராக மனுத்தாக்கல்

கொழும்பு, டிசெ. 27

பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ருஹுணு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் சுஜீவ அமரசேனவே அந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

ருஹுணு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவியில் இருந்து தான் அகற்றப்பட்டமையானது ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் தொடர்புடைய அரசியல் காரணங்களின் அடிப்படையில் நடைபெற்றுள்ளதாக அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# சகாதேவன் 'ஷட் அப்'

## வாய்ப்பூட்டுப் போட்ட அர்ச்சுனா

யாழ்ப்பாணம், டிசெ. 27

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றபோது பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் சகாதேவனுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்குமிடையே கருத்து மோதல் ஏற்பட்ட நிலையில் கூட்டம் சிறிது நேரம் களேபரமாக மாறியது.

சகாதேவன் அர்ச்சுனாவைப் பார்த்து, நாடாளுமன்ற உறுப்பினர் போல இல்லாமல் நீங்கள் ஏன் பைத்தியக்காரத்தனமாகப் பேசுகின்றீர்கள் என்று கூறினார்.

அதற்குப் பதிலாக 'ஷட் அப்' (வாயை மூடுங்கள்) என்று அர்ச்சுனா கொதித்தார். இதன்போது குறுக்கிட்ட தம்பிராசா, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர், 'ஷட் அப்' என்று எல்லாம் கூற முடியாது என்றார்.

சகாதேவனைப் பார்த்து அர்ச்சுனா "உங்களுடன் திருப்பி கதைத்ததற்காக ஒரு நாளில் 8 அல்லது 10 பேரை இடமாற்றம் செய்துள்ளீர்கள்" எனக் கூறியபோது, குறுக்கிட்ட தம்பிராசா, "ஒரு அரச அதிகாரியை பொது வெளியில் வைத்து அவமானப்படுத்தக்கூடாது. இடமாற்றம் பெற்றவர்கள் வேண்டும் என்றால் அமைச்சுக்கு முறையிடலாம்" என்று கூறினார்.

இவ்வாறு தொடர்ந்த கருத்துமோதல் முற்றி தரக்குறைவான வார்த்தைப் பிரயோகங்களாலும் இருவரும் மோதிக்கொண்டனர். (ச-125-26)

# பொலிஸாரின் இடமாற்றம் இடைநிறுத்தம்

கொழும்பு, டிசெ. 27

2025ஆம் ஆண்டு தொடர்பான பொலிஸ் திணைக்களத்தின் வருடாந்த இடமாற்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவது ஆறு மாதங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய இது தொடர்பான உத்தரவை கடந்த செவ்வாய்க்கிழமை பிறப்பித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இதன்படி இடமாற்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்தும் திகதி எதிர்வரும் ஜூன் மாதம் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மதுசாலைகள் முளைப்பு ஆராயக் குழு அமைப்பு

### கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெ. 27

**கிளிநொச்சி மாவட்டத்தில் மக்களுக்கு இடையூறாக அதிகளவில் திறக்கப்பட்டுள்ள மதுபான நிலையங்கள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு குழுவொன்றை நியமிக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.**

நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் நகர திட்டமிடலுக்கு இடையூறாக அதிகளவில் மதுபான நிலையங்கள் திறக்கப்பட்டமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, கூட்டத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

குறித்த மதுபான நிலையங்களை உடனடியாக மூடுவதெனில் சட்டச் சிக்கல்கள் ஏற்படும். ஆகவே அது தொடர்பில் அறிக்கை தயாரிக்க வேண்டும் என மாவட்டச் செயலர் முரளிதரன் குறிப்பிட்டார். அதற்கமைய குழுவொன்றை நியமித்து ஒவ்வொரு மதுபான நிலையத்தின் அமைவிடம், பொதுமக்களின் மனநிலை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து எதிர்வரும் ஜனவரி மாத இறுதிக்குள் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்றும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் அமைச்சருமான இ.சந்திரசேகர் அறிவுறுத்தினார். (ச-25-26-125)

## பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை மீண்டும் விரைவில் ஆரம்பிக்கப்படும்

யாழ்ப்பாணம், டிசெ. 27

போர்காலத்தில் கைவிடப்பட்ட பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை வெகுவிரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சரும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணத்தை விரைவில் அபிவிருத்தி செய்யவேண்டிய தேவை காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை மற்றும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை என்பன விரைவில் சீரமைக்கப்பட்டு இயங்கு நிலைக்குக் கொண்டுவரப்படும். அத்துடன், உப்பள அபிவிருத்திகள் தொடர்பிலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன - என்றார். (ம-125)

## கிளிநொச்சியில் 4,603 பேர் வீடுகள் இல்லா நிலையில்!

கிளிநொச்சி, டிசெ. 27

கிளிநொச்சி மாவட்டத்தில் வீடுகள் அற்ற நிலையில், 4 ஆயிரத்து 603 பொதுமக்கள் காணப்படுகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போதே, 2010ஆம் ஆண்டு தொடக்கம் 2023ஆம் ஆண்டு வரையான தரவுகளின் அடிப்படையில் இந்தத் தரவுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. (ம-125)

திணைக்களங்களுக்குச் சென்றால்

## கண்ணியத்தை கடைப்பிடிக்குக

### எம்.பி.க்களுக்கு அமைச்சர் அட்வைஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 27

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரச திணைக்களங்களுக்குச் சென்றால், அவர்கள் அங்கு கண்ணியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும், அமைச்சருமான சந்திரசேகரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் நேற்றைய அமர்வில், வடமாகாணத்தில் முடிவுறுத்தப்பட்ட சில வேலைத் திட்டங்கள் தொடர்பில் நேரடியாகச் சென்றுதான் பார்வையிட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா கோரியிருந்தார். இதையடுத்தே, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் எந்தத் திணைக்களத்துக்கும் செல்லலாம், ஆனால் அங்கே கண்ணியமாக நடக்க வேண்டும் என்று அமைச்சர் தெரிவித்தார். (ம-125)




இந்தக் கலியுகத்தில அப்பாவியளுக்குத்தான் சட்டமும், சாத்திரமும். அடாவடிக்காரருக்கு அது களொண்டும் இல்லை. இதுதான் இப்ப எல்லா இடமும் நடக்குது. அதுக்கு கச்சேரியளும் விதிவிலக்கு இல்லைத்தானே. கிளிநொச்சியில நேற்று ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நடந்ததெல்லோ. அதுக்கு மீடியாக்காரர் போறதுக்கு அந்தக் கச்சேரிக்காரர் கனக்க ரூல்ஸ் போட்டவை. "அரசாங்கம் குடுத்த மீடியா ஐசி உள்ளவயத்தான் உள்ளுக்க விடுவம். எந்தெந்த மீடியாவில இருந்து ஆர் வாறதெண்டு கடிதம் தரோணும், வாறவை தங்கட பேரை முதலே பதியவேணும்" எண்டு கச்சேரிக்காரர் கடும்பிடியா நிண்டவை. அவையின்ர சொல்வழி கேட்டு மீடியாக்காரரும் எல்லாம் பதிஞ்சுதான் கூட்டத்துக்குப் போனவை.

இப்பிடி ரூல்ஸை போடுறதும் ஒருவகையில நல்லதுதானே. இல்லாட்டி கையில போன் வைச்சிருக்கிறவை எல்லாரும் "நானும் மீடியாதான்" எண்டு கொண்டு கும்பலா வந்து, கூட்டத்தையும் குழப்பிக் கொண்டு நிப்பினம். அதாலதான் மீடியாக்காரரும் திருப்பிக் கேள்வி கேக்காமல், கச்சேரிக்காரர் சொன்னபடி செய்தவை. கூட்டவாசலிலையும் இந்தக் கடும்பிடிக்கு குறையில்லை. எல்லாற்ற பேர் விவரமும் சரியோ எண்டு பார்த்துத்தான் கூட்டம் நடக்கிற மண்டபத்துக்கு அனுப்பினவை. கூட்டம் தொடங்கி கொஞ்சநேரம் இருக்கும். மீடியாக்காரர் இருந்த இடத்துக்கு முன்னால நாலைஞ்சு யூரியூப்பர்கள் கையில போனோட வந்து , கூட்டத்தை 'கவர்' பண்ணத் தொடங்கிட்டினம். பின்னால இருந்த மீடியாக்காரருக்கு முன்னுக்கு கூட்டத்தில என்ன நடக்குதெண்டு பாக்கவிடாமல் இவை முன்னுக்கு நிண்டு, லைவ் வீடியோவும் விடத் தொடங்கிட்டினம். கச்சேரிக்காரர் அவையிட்ட ஐசியும் கேக்கேலை, சைனும் வாங்கேல, கடிதமும் வாங்கேலை. ஆனால் அஞ்சு நிமிசம் வீடியோ எடுத்திட்டு போங்கோ எண்டு சொல்லியிருக்கினம். ஆனால் அவைக்கு அஞ்சு நிமிச லைவ் வீடியோவில வருமானம் வராதே. அவையள் கூட்டம் முடியும் மட்டும் அங்கயே சுத்திச் சுழண்டு வீடியோக்களை எடுத்துப்போட்டுத்தான் போனவை.

இதாலதான் 'இனிமேல் மீடியாக்காரருக்கு ஒருங்கிணைப்புக்கூட்டத்துக்கு அனுமதியில்லை' எண்டு தடாலடியா கடற்றொழில் அமைச்சர் சொன்னவராம்,. ஆனால் அப்பிடி அவர் பொத்தாம் பொதுவா மீடியாக்காரர் எண்டு சொல்லியிருக்கக்கூடாது. எல்லா ரூல்ஸையும் சரியாக் கடைப்பிடிச்சு, சனத்துக்கு சரியான செய்தியைக் குடுத்த மீடியாக்காரரும், அழையா வீட்டில நுழைஞ்சு ஆக்களை மறைச்சுக் கொண்டு உலாத்தித் திரிஞ்ச யூரிப்பர்ஸும் அமைச்சருக்கு ஒரேமாதிரித் தெரிஞ்சிருக்க வாய்ப்பில்லைத்தானே. வாய்தவறித்தான் அமைச்சர் அப்பிடி பொதுவா மீடியா எண்டு சொன்னவரா. உண்மையில அவர் "சோஷல் மீடியாக்காரருக்குத்தான் தடை போட்டவர்" எண்டு அமைச்சரின்ர நெருக்கமான வட்டாரங்கள் சொல்லுகினம். அடுத்த கூட்டத்தில தெரியும் தானே ஆருக்குத் தடை எண்டு.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தந்தை வழியில் செலவுகள் ஏற்படக்கூடும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வருகை சில சங்கடங்களை ஏற்படுத்தினாலும், பாதிப்பு எதுவும் இருக்காது.

**இடபம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் ஏற்படும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகளை காலையிலேயே தொடங்குவது நல்லது. சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும்.

**கடகம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். தாயின் தேவைகளை நிறைவேற்றுவதில் சிறிது அலைச்சல் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்படும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. வாழ்க்கைத் துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**கன்னி:** முடிவுகளைத் தெளிவாகச் சிந்தித்து எடுப்பீர்கள். இளைய சகோதரர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். சிலருக்கு எதிர்பார்த்த சுபச் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**துலாம்:** மகிழ்ச்சி தரும் நாளாக அமையும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், புதிய முயற்சிகளைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படும்.

**விருச்சிகம்:** இன்று காரியங்கள் முடிவதில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டு நீங்கும். மனதில் அடிக்கடி சோர்வு ஏற்பட்டு விலகும். தாய்வழி உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்துவேறுபாடு விலகி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** ஆனால், சகோதர வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு ஏற்படும். தந்தையுடன் இருந்து வந்த கருத்துவேறுபாடு நீங்கி, தந்தையின் அன்பும் ஆதரவும் கிடைக்கும்.

**கும்பம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். தந்தையுடன் வீண் வாக்கு வாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். இன்று எந்த விஷயத்திலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். மற்றவர்கள் விவாதம் செய்ய முற்பட்டால் விலகிச் செல்வது நல்லது.



# கௌதாரிமுனையில் மணலகழ்வு முற்றுமுழுதாகத் தடைவிதிப்பு

## கிளிநொச்சி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

**யாழ்ப்பாணம், டிசெ. 27**

**கௌதாரிமுனையிலிருந்து மணல் அகழ்வு முற்றாகத் தடை செய்யப்படுவதாகவும் இதனை மீறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.**

கௌதாரிமுனை ஒரு முக்கியமான பிரதேசமாகும். இங்குள்ள மணல் மேடுகளே கடல் நீர் உள்ளே வராமல் பாதுகாக்கின்றது. இந்தப் பகுதியில் கடல்சார் வளங்கள் மற்றும் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய வகையில் மணலகழ்வு இடம்பெற்று வருகின்றது. எனவே அந்தப் பகுதியை பாதுகாக்கும் முகமாக இனிவரும் காலங்களில் அப்பகுதியில் மணலகழ்வு மேற்கொள்ள முற்றுமுழுதாக தடை செய்து தீர்மானம் எட்டப்படுவதாக அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார். (ச-113-26-125)

# எங்களின் காணிகளையே விடுவிக்கக் கோருகிறோம்

## ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 27

இராணுவத்தினரின் காணிகளை வடக்கு மக்கள் விடுவிக்கக் கோரவில்லை. அவர்களின் சொந்தக் காணிகளையே விடுவிக்கக் கோருகின்றார்கள் என்று வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், தென்னிலங்கையைச் சேர்ந்த சிவில் சமூகக் குழுக்களிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இங்கு காணிகள், வீதிகள் விடுவிக்கப்பட்டதும் தென்னிலங்கையிலிருந்து சில தேவையற்ற கருத்துகள் வெளியிடப்பட்டு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

தென்னிலங்கை மக்களுக்கு இங்கு நடைபெறுவது என்ன? என்ற உண்மையை தெளிவுபடுத்துமாறு என்னைச் சந்தித்த தென்னிலங்கையைச் சேர்ந்த சிவில் சமூகக் குழுக்களிடம் தெரிவித்திருக்கின்றேன். இந்த அரசாங்கத்தின் காலத்தில் காணிகள் படிப்படியாக விடுவிக்கப்படும் என்று நம்புகிறேன்- என்றார். (ச-இ)

# கஞ்சாவுடன் இளைஞன் பனிப்புலத்தில் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 27

பனிப்புலம் பகுதியில் இளைஞர் ஒருவரை கஞ்சாவுடன் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்துள்ளதாக இளவாலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பனிப்புலம் பகுதியில் விசேட ரோந்து நடவடிக்கைகளின் போது வீதியில் சந்தேகத்துக்கிடமாக நடமாடியவரை வழிமறித்து சோதனையிட்டபோதே சந்தேகநபரிடமிருந்து 910 மில்லிகிராம் கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சந்தேகநபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ச-125)

# மார்கழி இசைவிழா முதல்நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 27

யாழ்.இந்தியத் துணைத் தூதரகம், நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் மற்றும் யாழ்.வணிகர் கழகம் இணைந்து ஏற்பாடு செய்துள்ள மார்கழி இசைவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 29ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

முதல்நாள் நிகழ்வில் மாலை 5.10 மணிக்கு இந்தியன் கோர்னர் இசைப்பிரிவு மாணவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்து இடம்பெற்று தொடர்ந்து 5.30 மணிக்கு யாழ். மண்ணில் புகழ்பூத்த தவில், நாதஸ்வர வித்துவான்களின் இசைச்சங்கமம் இடம்பெறும். பின்பு மாலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை மாணவர்கள் வழங்கும் தமிழ் இசை அரங்கு இடம்பெறும்.

இரவு 7 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் வழங்கும் 'அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்' இலக்கிய நாடகம் அரங்கை அலங்கரிக்கும்.

இரவு 7.40 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நடனத்துறை மாணவர்களின் 'தேவன் எங்கே' நாட்டிய நாடகம் இடம்பெறும். இரவு 8.30 மணிக்கு பேராசிரியர் சி.மௌனகுருவின் நெறியாள்கையில் டவர் தமிழ் நாடகப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் 'இராவணேசன்' வடமோடி நாடகத்துடன் நிகழ்வு நிறைவுறும். (ச)

# சமகால அரசியல் உரையரங்கு

யாழ்ப்பாணம், டிசெ. 27

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் நடத்தும் சமகால அரசியல் உரையரங்கு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் ஆவரங்கால் கூட்டுறவு நகர் மேல்மாடியில் அமைந்துள்ள கூட்டுறவு மண்டபத்தில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கோசலை மதன் 'தமிழ்மக்களும் புதிய அரசியல் அமைப்பும்' எனும் தலைப்பிலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் 'தமிழ்மக்களும் முறைமை மாற்றமும்' எனும் தலைப்பிலும் உரையாற்றவுள்ளனர். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

## பம்மாத்து அரசியல் வேண்டாமே!

ஊழலை ஒழிப்போம் என்ற கோஷத்துடன் ஆட்சிக்கு வந்திருக்கும் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் செயற்பாடுகள் சில கேள்விகளையும், ஏமாற்றங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றன. ஆட்சிக்கு வந்ததும் கடந்த காலங்களில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம், தேர்தல் வெற்றிகளின் பின்னர் இலங்கையின் வழமையான வாக்கு அரசியலுக்குள் சிக்கித் திண்டாடுகின்றதோ என்ற சந்தேகம் எழுந்திருக்கின்றது. அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் ஊழல் ஒழிப்பு என்பதை முன்னிறுத்திச் செயற்படுகின்றபோதும், அதைச் செயற்பாட்டு ரீதியில் சரியாக முன்னெடுக்கின்றதா என்றால் இல்லை என்பதே பதிலாக இருக்கின்றது. ஆட்சிக்கு வந்ததும் ஊழல்களில் ஈடுபட்டவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுப்போம் என்று தேர்தலுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தி உறுதியளித்திருந்தது. ஆனால் ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றியீட்டிய பின்னர், அந்த விடயத்தை அரசாங்கம் அடக்கி வாசிக்கவே ஆரம்பித்திருக்கின்றது. ஊழலில் ஈடுபட்ட முன்னாள் அரசியல்வாதிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாட்டு மக்கள் எதிர்பார்த்திருக்கின்றபோதும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஏமாற்றுகின்றது என்றே கூறவேண்டியிருக்கின்றது.

தற்போது நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைத்திருக்கும் அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கத்துக்கு தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் எந்தத் தடையும் இல்லை. ஆனால் ஆட்சி அதிகாரம் கிடைத்தும், இப்போதும் தேசிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியைப் போன்றே செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. மதுபான அனுமதிப்பத்திரம் பெற்ற பட்டியலை வெளியிடுவோம், ஜனாதிபதி நிதியத்தில் நிதி பெற்றவர்களின் பட்டியலை வெளியிடுவோம் என்று பரபரப்பைக் கிளப்புவதை மட்டுமே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செய்து கொண்டிருக்கின்றது. ஆனால் பட்டியல்களை வெளியிடுவது அரசாங்கத்தின் வேலையல்ல. ஊழல்கள், முறைகேடுகள் நடைபெற்றிருந்தால், அவற்றில் ஈடுபட்டவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டுமே தவிர, பட்டியல்களை வெளியிடுவதால் எதுவும் நடந்துவிடப்போவதில்லை.

உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தலையும், மாகாணசபைத் தேர்தலையும் இலக்காகக் கொண்டு தான், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இவ்வாறான அறிக்கைகள் மூலம் பரபரப்பைத் தக்கவைக்க முயற்சிக்கின்றதா என்ற கேள்வியும் எழுகின்றது. மக்கள் மத்தியில் ஊழலுக்கு எதிரானவர்கள் என்ற தோற்றத்தை தக்கவைத்து -பேசுபொருளாக்கி உள்ளூராட்சிச் சபைத் தேர்தலிலும், மாகாணசபைத் தேர்தலிலும் வாக்குகளைத் தங்கள் பக்கம் திருப்புவதற்கான எத்தனிப்புகளை முன்னெடுக்கின்றனர். பிரதமர் முதல் மாகாண ஆளுநர்வரையில் அரச ஊழியர்களை நோக்கிக் குற்றச்சாட்டுகளை அடுக்கிக்கொண்டிருக்கின்றனரே தவிர, இந்தநிலைமையை மாற்றி ஊழல், முறைகேடுகள் அற்ற அரச நிர்வாகத்தை உருவாக்குவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஊழல், முறைகேடுகள் தொடர்பாக மேடைகளில் பேசுவதையும், அறிக்கைகள் வெளியிடுவதையும் விடுத்து, கடந்த காலங்களில் ஊழல் முறைகேடுகளில் ஈடுபட்டவர்களைத் தண்டிக்கவும், எதிர்காலத்தில் அவ்வாறு நிகழாமைக்கு ஏற்படுத்தவேண்டிய திட்டங்களையுமே மக்கள் அரசாங்கத்திடம் எதிர்பார்க்கின்றனர்.


அரசாங்கம் தங்கள் மீது உள்ள பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டியது கட்டாயம். வாரந்தோறும் பட்டியல்களையும், அறிக்கைகளையும் வெளியிட்டு பரபரப்பைத் தக்க வைக்க முயற்சிக்காமல், உண்மையில் ஊழல், மோசடிகள் நடந்திருந்தால் அவை தொடர்பில் விரைவான நடவடிக்கையை மேற்கொண்டு, சட்டத்தின் முன் குற்றவாளிகளை நிறுத்த முயலவேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுத்துவிட்டு அதை மக்களுக்கு அறிவிக்கவேண்டும். அதுவே தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தவர்களதும், நாட்டு மக்களினதும் எதிர்பார்ப்பு. அதைவிடுத்து வெறுமனே எதிரணியில் இருப்பதைப் போல அறிக்கைகள், மேடைப் பேச்சுகள், பட்டியல்கள் மூலம் பம்மாத்து அரசியல் செய்து மக்கள் காதில் பூச்சுற்ற முயலக்கூடாது. மக்கள் வழங்கிய அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களின் எதிர்பார்ப்புகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டியது கட்டாயம்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

பெரும்பாலும் முதல் சிந்தனை
தெளிவற்றதாக இருக்கும்;
எதற்கும் மறு சிந்தனை செய்யுங்கள்.

– ஷேக்ஸ்பியர் –




### 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த

## மோடிக்கு தமிழகக் கட்சிகள் அழுத்தம் கொடுக்கவேண்டும்

**கொழும்பு, டிசெ. 27**
**13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமாறு தமிழக கட்சிகள் இந்திய பிரதமர் மோடியிடம் கோரிக்கை விடுக்க வேண்டும் என வடக்கு-கிழக்கு மாகாணங்களின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தெரிவித்துள்ளார்.**

தி இந்து பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் அவர் இதனைக் கூறியுள்ளார். இலங்கையில் உள்ள தமிழ்க் கட்சிகளும், தமிழகத்தில் உள்ள கட்சிகளும் பிரதமர் மோடியிடம் 13ஐ நடைமுறைப்படுத்தும் அழுத்தத்தை இலங்கைக்குக் கொடுக்கவேண்டும் . 1987ஆம் ஆண்டு இந்தியாவின் தலையீட்டின் பிரகாரம்தான் 13ஆவது திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டது. எனவே, அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அழுத்தத்தை இந்தியா கொடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-6)



## மூத்த எழுத்தாளர் பரராசசிங்கம் மறைவு

யாழ்ப்பாணம், டிசெ. 27
யாழ்.நீர்வேலியைச் சேர்ந்த மூத்த எழுத்தாளர் தர்மலிங்கம் பரராசசிங்கம் நேற்று முன்தினம் புதன்கிழமை தனது 78 ஆவது வயதில் நீர்வேலியில் காலமானார். யாழ்.நீர்வேலியில் பிறந்த இவர் நீர்வை மண்ணில் பல்வேறு சமூக, ஆன்மீகப் பணிகளை ஆற்றியுள்ளதுடன் 'புகழ்பூத்த நீர்வேலி' , 'வளம் மிகுந்தது வலிகாமம் கிழக்கு' ஆகிய நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். அத்துடன் நீர்வை அன்பன், பரா, மிதிலையான், தெரியாதவன், படிக்காதவன் என்ற புனை பெயர்களில் பல கட்டுரைகளைப் பத்திரிகைகளில் எழுதி விருதுகளையும், கௌரவங்களையும் இவர் தனதாக்கியவராவார். (ச-66)

### விபத்துகளைத் தடுப்பதற்கு

## பொலிஸாருக்கு 1,50,000 மதுப்பரிசோதனைக் கருவிகள்

கொழும்பு, டிசெ. 27
பண்டிகைக் காலங்களில் இடம்பெறும் வீதி விபத்துகளைத் தடுக்கும் நோக்குடன் நாடளாவிய ரீதியில் பொலிஸாருக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மதுப்பரிசோதனைக்கருவிகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மானதுங்க தெரிவித்துள்ளார்.
பண்டிகைக் காலங்களில் மதுபோதையுடன் வாகனம் செலுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதாகவும் இதனால் பண்டிகைக் காலங்களில் வீதி விபத்துகள் அதிகரித்துக் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)

## இந்தியப்பிரஜை நீரில் மூழ்கிச் சாவு

கொழும்பு, டிசெ. 27
ஹிக்கடுவ, தொடந்துவ பிரதேசத்தில் கடலில் நீராடச் சென்ற இந்தியப் பிரஜை ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார். தனது குடும்பத்துடன் நீராடிக் கொண்டிருந்த போதே அவர் மூழ்கியுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். ஹிக்கடுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## 'அமுல்' ஒப்பந்தம்; அநுர அரசு இரத்து

கொழும்பு, டிசெ. 27
முன்னைய அரசாங்கம் இந்தியாவின் 'அமுல்' நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கு தற்போதைய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.
இலங்கையில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் முன்னைய அரசாங்கம் இந்தியாவின் அமுல் நிறுவனத்துடன் ஆரம்பகட்ட ஒப்பந்தமொன்றை செய்திருந்தது.
இதற்கு அப்போது தேசிய மக்கள் சக்தி சார்பு தொழிற்சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. இந்த நிலையிலேயே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வெளிநாடுகளுக்கு சொத்துகளை விற்பனை செய்வதற்கு எதிரான கொள்கையுடையது எனத் தெரிவித்து குறித்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-6)

நாளை
சனிக்கிழமை - மார்கழி - 13
28.12.2024
சுபநேரம் : 03.28 - 04.58
ராகுகாலம் : 09.28 - 10.58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழிப்பேரலை 20ஆவது ஆண்டு நினைவேந்தல் பதிவுகள்





## முல்லைத்தீவில்...

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தில் காவுகொள்ளப்பட்டவர்களின் 20 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு முல்லைத்தீவு சுனாமி நினைவாலயத்தில் நேற்று வியாழக்கிழமை உணர்வெழுச்சியுடன் மேற்கொள்ளப்பட்டது. (ச-25, 246)




## வவுனியாவில்...

வவுனியா பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயம் மற்றும் வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் சுனாமி பேரலையில் உயிர்நீத்தவர்களுக்கான 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு, பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டுகழக மைதானத்தில் அமைந்துள்ள சுனாமி நினைவுத் தூபியில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. (ச-25, 110)



## மன்னாரில்...



சுனாமி பேரலை அனர்த்தத்தில் உயிர்நீத்த வர்களின் 20ஆவது வருடநினைவேந்தலும், தேசிய பாதுகாப்பு தினமும் மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று வியாழக் கிழமை அனுஷ்டிக்கப்பட்டன. (ச- 25, 56,60

வவுனியாமாவட்ட அனர்த்த முகா மைத்துவப் பிரிவின் ஏற்பாட்டில், வவுனியா மாவட்ட செயலகத்தில் சுனாமி பேரலையில் உயிர் நீத்தவர்களின் 20 ஆம் ஆண்டு அஞ்சலி நிகழ்வு நேற்று வியாழக்கி ழமை இடம்பெற்றது. நிகழ்வில் உயிரிழந்தவர்களுக்காக தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-25,18)



## உடுத்துறையில்...



வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், 2004 ஆம் ஆண்டு ஏற் பட்ட ஆழிப்பேரலையால் உயிர் நீத்தவர்களை நினைவுகூரும் நிகழ்வு உடுத்துறை சுனாமி நினை வாலயத்தில் நேற்று வியா ழக்கிழமை இடம்பெற்றது. (ச-25, 27,100,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழிப்பேரலை 20ஆம்ஆண்டு நினைவேந்தல் பதிவுகள்





ஆழிப்பேரலை 20ஆம்ஆண்டு நினைவேந்தல் முல்லைத்தீவு கள்ளப்பாட்டில் பெருந்திரளான மக்களின் பங்கேற்புடன் நேற்று உணர்வுபூர்வமாக இடம் பெற்றது. (ச-246)





சுனாமி ஆழிப்பேரலையின் 20ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வும் தேசிய பாதுகாப்புத் தினமும் கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. தேசியக்கொடி ஏற்றலுடன் சுனாமி மற்றும் ஏனைய அனர்த்தங்களால் உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-25,125,113)



யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அலுவலகத்தின் ஏற்பாட்டில், ஆழிப் பேரலையில் உயிர்நீத்த உறவுகளுக்கான 20 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. (ச-27)







மணற்காடு பகுதியிலுள்ள சுனாமி நினைவாலயத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தின் 20 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமான முறையில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. (ச-100)


## சுனாமியில் இறந்தோருக்கு வவுனியாவில் வழிபாடு

வவுனியா கோவில்குளம் அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தில் சுனாமிப் பேரலையில் உயிர் நீத்தவர்களின் 20 ஆம் ஆண்டு நினைவாக விசேட வழிபாடும் அஞ்சலி நிகழ்வும் நேற்று இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் மற்றும் அகிலாண்டேஸ்வரர் ஆலயதர்மகர்த்தா சபையும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன. (ச-18)








ஆழிப்பேரலையின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. இதன்போது மாண வர்களால் ஒளிச்சுடர் ஏற்றி மலர் அஞ்சலியும் செலுத்தப் பட்டது. (ச-125,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 12 . 11 . 1955

ஆண்டவன் அடியில் 27 . 11 . 2024



கடந்த 27.11.2024 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எம் தெய்வம்

## அமரர் வைத்தி பரஞ்சோதி

(சோதி மோட்டார்வேர்க்ஸ் உரிமையாளர் - சாவகச்சேரி)

திதி - துவாதசி

அன்னாரின் 31ம் நாள் நினைவஞ்சலி இன்று (27.12.2024) வெள்ளிக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச்செய்திகேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும்,முகநூல், மின்னஞ்சல் வழியாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்த வர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள், இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(CS/29496) J-1 குடும்பத்தினர்

# காய்ச்சலால் சிசு உயிரிழப்பு

பிறந்து மூன்று மாதங்களே நிரம்பிய ஆண் குழந்தையொன்று காய்ச்சல் மற்றும் இருமல் காரணமாக பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது. பங்கஜன் சிறீதிகன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. கடந்த 24ஆம் திகதி குழந்தைக்கு காய்ச்சலுடன் இருமல் ஏற்பட்டுள்ளது. அத்துடன், சுவாசிக்கவும் குழந்தை சிரமப்பட்டுள்ளது. இதையடுத்து, குழந்தை நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சையின்போது நேற்று மாலை உயிரிழந்துள்ளது. மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-26)

# ஈராண்டு நினைவும், திதிக் கிருத்திய அழைப்பும்

## திருமதி பங்கயச்செல்வி வடிவேல் (பேபி)

(முன்னாள் பாலபண்டிதர். யாழ்/ வைத்தீஸ்வராக் கல்லூரி பழைய மாணவி)

MRS - PANKAYACHELVI VADIVEL ( BABY)

(Former Bala Pandit & Old student of Vaidyeshwara College)



"நாட்களும் வருடமாய் மெல்லவே நகர்ந்திடினும்
நம் இருவரின் தொப்புள்கொடி பந்தமும் ஸ்பரிசமும்- இம்மேதினியில்
என்னுயிர் துறக்கும் வரை இனிய
நும்முகமும் அரவணைப்பும்
என் அகத்தை விட்டு ஒருபோதுமகலாது அம்மா ....."

யாழ்.வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், மட்டு. கோட்டைக்கல்லாற்று மலைமாரி செல்விவேல் வாசத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட என்னுயிரினும் மேலான அன்னை ஆகிய ஆருயிர் அன்புத் தெய்வம், குடும்ப வழிகாட்டி

அவர்களின் இரண்டாம் வருட பூர்த்தித் திதிநாள் கிருத்திய நிகழ்வுகள் இன்று (27.12.2024) வெள்ளிக் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா ஈடேறப் பிரார்த்திப்பதுடன் அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை வாஞ்சையுடன் அழைக்கின்றேன்.

பிரிவால் துயருறும்
பாசமிகு மகன் செந்தா.
(திரு - வடிவேல் செந்தூர்வடிவேல்) 077 6155387 , 075 4257616 , 075 4675387.

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 10 . 1931

மறைவு 25 . 12 . 2024



## நடராசா சிவபாக்கியம்

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் ஓமந்தை சேமமடு 2 ஆம் யூனிற்றை தற்பொழுது இருபாலை வீதி, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவபாக்கியம் நேற்றுமுன்தினம் (25.12.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நயினாதீவு மருதடியார் நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான புங்குடுதீவு நடுவுதுரித்தி இரத்தினம் (தாடிபெரியார்) - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினம் நடராசா அவர்களின் அன்பு மனைவியும், ஜீவரத்தினம், யோகரெத்தினம் (H.A.R.), ஜெயரெத்தினம், ரவீந்திரன், இரஞ்சிதமலர், புஸ்பராஜன் (செல்வன்), கலைச்செல்வி, கலைவாணி, காலஞ் சென்றவர்களான இராசலட்சுமி, பாலேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும், அரியதுரை, சந்திராதேவி, மங்கையற்கரசி, அரியபுத்திரன், யோகேந்திரன், றன்சிதன், ராகினி, புனிதவதி, உதயகுமாரி, காலஞ்சென்ற காரளசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், மயில்வாகனம், பாலசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வர்களான சோமசுந்தரம், மயில்வாகனம், தெய்வேந்திரம், சொர்ணம்மா, பூபதி மற்றும் யோகம்மா, கனகம்மா, புவனேஸ்வரி, கமலா ஆகியோரின் அன்பு மைத்துனியும், பேரப்பிள்ளைகளையும், பூட்டப்பிள்ளை களையும் கொண்டவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2024) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இருபாலை வீதி,
கோண்டாவில்.

தகவல்:
மகன் - யோகரெத்தினம் (H.A.R.)
075 269 8174
மகன் - புஸ்பராஜன் (செல்வன்)
074 055 1167

(cs.57024) (N -1)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 28 . 07 . 1946

அம்பிகை அடியில் 25 . 12 . 2024



கலாபூசணம், சமூகசோதி, நீர்வைக்குரிசில்

## விஸ்வப் பிரம்மஸ்ரீ தர்மலிங்கம் பரராசசிங்கம் சமாதான நீதவான்

(நீர்வேலி காமாட்சி அம்மன் ஆலய தர்மகர்த்தா, முன்னாள் உரிமையாளர் நீர்வேலி அம்பாள் ஹாட்வெயர்ஸ், சுன்னாகம் ஸ்ரீ அம்பாள் ரேட்ஸ், முன்னாள் ஊடகவியலாளர்)

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கலாபூசணம் தர்மலிங்கம் பரராசசிங்கம் நேற்று முன்தினம் (25.12.2024) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சமூகத்தொண்டன் தர்மலிங்கம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற லோகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கனகாம்பிகை செல்வநாயகம் அவர்களின் அருமைச் சகோதரனும், தர்மகுமாரன் (ஆங்கில போதனாசிரியர், தொழில்நுட்பக் கல்லூரி மன்னார், யாழ்ப்பாணம்), தர்மசங்கரன் (பொறுப்பதிகாரி பொதுச் சுகாதாரப் பொறியியல் பிரிவு யாழ் மாநகர சபை), தர்மரூபன் (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீபிரியா (முகாமைத்துவ உத்தியோகத்தர், நல்லூர் பிரதேச சபை), வாலாம்பிகை (முன்னாள் உத்தியோகத்தர் IT Park), சாருஜா (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், நேருக்சன், சிஜிசன், வைசகி, கேசிகன், பராபரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (27.12.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நீர்வேலி வடக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் நீர்வேலி சியாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் , அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மிதிலா
காமாட்சி அம்மன் கோவிலடி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

(CS/57026) J-1

தகவல்: குடும்பத்தினர்
077 792 3653, 075 163 0502

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**13 வருட காலமாக இயங்கிவரும் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் இடங்களில் வீடு வாடகைக்குத் தேவைப்படுகிறது.**

- திருநெல்வேலி (பலாலி வீதி)
- கோப்பாய் (பருத்தித்துறை வீதி)
- மானிப்பாய் (யாழ்ப்பாண வீதி/ சுதுமலை வீதி)
- பண்டத்தரிப்பு (சண்டிலிப்பாய் வீதி)

**உரிய முற்பணம், தகுந்த வாடகை வழங்கப்படும்.**

**077 337 4261**

(CS/57023) J-1

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**
**பொதுமக்களுக்கான அறிவித்தல்**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்கான பிரதேச அபிவிருத்தித்திட்டம் 2024-2034**

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்கள் நகர அபிவிருத்திப் பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபைக்கான பிரதேச அபிவிருத்தித்திட்டம் (2024-2034) தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக குறித்த அபிவிருத்தித் திட்டம் பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மற்றும் மானிப்பாய் பட்டின உப அலுவலக நூலகம், மானிப்பாய் கிராம உப அலுவலக நூலகம், பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக நூலகம், பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக நூலகம் ஆகியவற்றில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருவதுடன் இவ் அபிவிருத்தித் திட்டம் தொடர்பான கருத்துக்கள் ஆலோசனைகளை சமர்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ் அபிவிருத்தித் திட்டத்தினை சபையின் முகப்புத்தகம் மற்றும் இணையத்தளம் என்பவற்றிலும் பார்வையிடலாம்.

தொலைபேசி :- 021 225 6647
மின்னஞ்சல் :- vswps@yahoo.com
இணையத்தளம் :- valikamamsw.ps.gov.lk

சீ.சபேசன்.
செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.
27.12.2024

(CR/43975) J-1

**நினைவஞ்சலிகள்**

**முதலாம் ஆண்டு**



தோற்றம் 21 . 05 . 1943
மறைவு 07 . 01 . 2024

**அமரர் கமலாதேவி பேரானந்தம்**
திதி: அபரபட்ஷ துவாதசி

**21 ஆம் ஆண்டு**



தோற்றம் 11 . 12 . 1974
மறைவு 15 . 01 . 2004

**அமரர் பேரானந்தம் உமாசுதன்**
(போட்டோ சுதன்)

பாரினிலே எம்மைத் தவிக்கவிட்டு நினைவுகள் மட்டும்
நிறையவே தந்து நிதர்சனமாய் சென்றதேனோ?
என்றும் எம் நெஞ்சை விட்டு அகலாது உங்கள் நினைவுகள்
நீங்கா நினைவுகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

காராளர் வளவு,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

துயரால் பிரிவுறும்
குடும்பத்தினர்

**வேலைக்கு ஆட்கள் தேவை**

கொடிகாமத்தில் வேலைக்கு ஆள் தேவை கொடிகாமத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது 25000 தொடக்கம் 35000 வரை சம்பளம் வழங்கப்படும் பெண்களுக்கு முன்னுரிமை

**தொடர்புகளுக்கு:**
**077 989 8190, 075 475 7056**

(CS2102) V-1

# கரைச்சிப் பிரதேசசபையை இரண்டாகப் பிரிகின்றது!

## கிளி. ஒருங்கிணைப்புக்குழு ஒப்புதல்

கிளிநொச்சி, டிசெ. 27

கிளிநொச்சிப் கரைச்சி பிரதேசசபையை, நிர்வாக இலகுபடுத்தலை மையப்படுத்தி இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போதே நிர்வாக இலகுபடுத்தல் திட்டங்களுக்காக கரைச்சி பிரதேசசபையை இரண்டாகப் பிரித்து, கண்டாவளை பிரதேசசபையை புதிதாக உருவாக்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், கிளிநொச்சி மாவட்டத்தில் நகரசபை ஒன்றை உருவாக்கவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-125)

**முதலாம் ஆண்டு நினைவலைகள்**



**அமரர் இராசையா முத்தம்மா** (ஈஸ்வரி)
திதி: துவாதசி (27.12.2024)

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஆண்டு ஒன்று சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

98/2, சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(cr.43929 (N-1)

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினர் மகள் (சுவிஸ்)

**1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



**அமரர் சௌபாக்கியகௌரி பத்மநாதன்**

மண்ணுலகில் பிறந்து மண்ணுலக வாழ்வில்
மனம் மகிழ வாழ்ந்து இறைவன் நம்பிக்கையில்
ஈடுபட்டு கல்விச் சுடர் ஏற்றி
குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்து
எல்லோரின் உயர்வுக்காய் பாடுபட்டு
பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த
எம்முயிர் தெய்வமே!
அன்புக்கு இலக்கணமாய்
பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்தீர்கள் அம்மா!
கண்கவரும் கம்பீரத் தோற்றமும்
கணீரென்ற கனிவான பேச்சுரையும்
அன்பே உருவான வட்ட முகம் தனிலே
இன்பமாய் உதிக்கும் உதட்டோர சிரிப்பும்
என்றும் மறக்க முடியவில்லை
ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலாது
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

"இராஜஸ்தான்"
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.
27.12.2024

குடும்பத்தினர்
கணவர் - ம.பத்மநாதன்

(cr.43974) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கின்...

களும் தங்களுக்கென பிரத்தியேக மூலோபாயத் திட்டத்தைக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு திணைக்களங்களும் உச்ச நோக்கத்தை அடைவதற்கு அந்த மூலோபாயத் திட்டங்கள் உதவுகின்றன. எனவே, வடக்கு மாகாணத்துக்கென மூலோபாயத் திட்டங்கள் உள்ளனவா?' என்று கேள்வி எழுப்பினார். இதற்கு, வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சமன் ரத்னபிரிய, 'இல்லை' என்று பதில் வழங்கினார்.
இதைத் தொடர்ந்து, நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, 'உங்களிடம் கிளிநொச்சி மாவட்டத்துக்கான மூலோபாயத் திட்டம் உள்ளதா?' என்று கேள்வி எழுப்பினார். இதற்கும், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சமன் ரத்னபிரிய, 'இல்லை' என்று பதில் வழங்கினார். அத்துடன், பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரிகளை மையப்படுத்திய திட்டமிடல்கள்தான் உள்ளன என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.
இதைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, 'வடக்கில் சுகாதார சேவைகள் கட்டியெழுப்பப்படவேண்டும். ஆனால், அதற்குரிய மூலோபாயத் திட்டமிடல் இல்லையென்றால், எவ்வாறு அந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பது?' என்று கேள்வி எழுப்பினார். இந்த விடயத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுடன் இணைந்து செயற்படுவதற்குத் தயாராக இருப்பதாகவும், அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சமன் ரத்னபிரிய தெரிவித்தார். (அ-ம-125)

## வடக்கு...

ஆட்சிக் காலத்தில்தான் நந்திக்கடலில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இதனால் சர்வதேச ரீதியில் அவர் எதிர்கொண்ட அழுத்தங்கள் ஏராளம். போர் இவ்வாறு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டாலும் எமது நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம்கூட இதன் ஓர் அங்கம்தான். ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டதால் மஹிந்தவுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லையென எவராலும் கூறமுடியாது. எனவே மஹிந்தவை பாதுகாக்க வேண்டியது எமது இனத்தின் கடப்பாடாகும்.
76 ஆண்டுகால சாபத்துக்கு முடிவு கட்டத்தான் அநுரவை ஜனாதிபதியாக்கினார்கள். எனவே, அவரின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவேண்டும்.
ஜனாதிபதி மாளிகைப் பகுதிகளில் உள்ள வீதிகளில் இருந்த பாதுகாப்பு நீக்கப்பட்டதன் நோக்கம் என்ன? யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில் இருந்த இராணுவப் பாதுகாப்பு அரண்கள் நீக்கப்பட்டுள்ளன.
இவ்வாறு வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தை சிலர் தவறாகப் பயன்படுத்தி சூழ்ச்சி செய்கின்றனரா? என்பது தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினர் விழிப்பாக இருக்க வேண்டும். ஏனெனில் புலிகள் காடு மாறினாலும் அதன் உடலில் உள்ள புள்ளிகள் மாறாது என்பார்கள். ஜனாதிபதி செயலக வீதிகளைத் திறக்க முடியும் என்றால், திவுலபத்தான வீதியை ஏன் திறக்க முடியாது?' - என்றார். (அ-ம-44)

## தனியார்...

கோரப்பட்டுள்ளது. நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கிளிநொச்சியில் முப்படையினரின் கட்டுப்பாட்டில் காணப்படும் தனியார் காணிகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. இதன்படி, இலங்கை இராணுவத்திடம் 537.29 ஏக்கரும், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திடம் 871.25 ஏக்கரும், பொலிஸ் திணைக்களத்திடம் 7.99 ஏக்கரும், கடற்படையிடம் 7.35 ஏக்கரும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.
இதையடுத்தே, படையினர் மற்றும் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் காணப்படும் தனியார் காணிகளின் விவரங்களைத் தருமாறு படையினர் கோரியுள்ளனர். காணிவிடுவிப்புக்குஏதுவாக அந்த விபரங்களை பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைப்பதாகவும் படையினர் தெரிவித்தனர். (அ-ம-125)

## மறைந்தார்...

நேற்று இரவு 10 மணியளவில் அவர் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.
இரண்டு தடவைகள் இந்தியப் பிரதமர், இந்தியாவின் நிதியமைச்சர், இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர், இந்திய அரசின் பொருளாதார ஆலோசகர், பொருளாதாரப் பேராசிரியர் என்று பன்முகத்தன்மை கொண்ட ஆளுமையாக மன்மோகன் சிங் விளங்கினார்.
அவருடைய மறைவுக்கு இந்தியப் பிரதமர் மோடி, எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்களான சோனியா காந்தி, கார்கே, பிரியங்கா காந்தி உள்ளிட்ட பலரும் தமது இரங்கலைத் தெரிவித்து வருகின்றனர். (அ-ம-இ)

## காணி...

பெற்றபோது, பலர் காணி உறுதிகளின்றி பிரச்சினைகளை எதிர்கொள்வதாகவும் இதன் காரணமாக வீட்டுத்திட்டம் முதல் பல நன்மைகளை பெறுவதில் இடையூறுகள் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.
இதன்போது கிளிநொச்சி பதில் மாவட்டச் செயலர் தெரிவித்ததாவது:-
நாம் ஒரு காணியை ஆராய்வதற்கு சென்றால் அந்தக் காணியில் 1970ஆம் ஆண்டு உரிமையாளர் ஒருவர் இருந்திருப்பார். அவர் இன்னுமொருவருக்கு விற்றுவிட்டு சென்றிருப்பார். இதனைக் கொள்வனவு செய்த மூன்றாம் தரப்பு குறித்த காணியில் வீட்டைக் கட்டி வாழ்ந்து வருவார். இத்தகைய நெருக்கடிகளால் காணி உறுதிகளை வழங்குவதில் சிக்கல்நிலை காணப்படும். எந்தவிதப் பிரச்சினைகளும் அற்றவர்களுக்கு காணியை வழங்குவதற்கு விரைந்து நடவடிக்கைகளை எடுப்போம். அத்துடன் 1952, 1953, 1954, 1958ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் மலையகத்தில் இருந்து கிளிநொச்சி மாவட்டத்திற்கு குடியேற்றப்பட்டவர்களின் காணிப் பிரச்சினைகளும் கவனம் செலுத்தப்படும். அத்துடன் காணிப் பிணக்குகளை நிவர்த்தி செய்வதற்கு நடமாடும் சேவைகள் நடத்தப்படும் - என்றார். (அ-ச-125)

## ஊடகவியலாளர்...

ஏ-9 வீதியில் உள்ள தொலைத்தொடர்புக் கோபுரமொன்றுக்கு அருகாக வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சிறிய ரக வாகனம் ஒன்றில் வந்த இருவரே, கண்காணிப்புக் கமராக்கள் அற்ற இடத்தில் வைத்து தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று ஊடகவியலாளர் தமிழ்ச்செல்வன் தனது பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.
வாகனத்துக்குள் தன்னைத் தள்ளிவிட்டுக் கடத்த முற்பட்டனர் என்றும், பின்னர் ஒருவாறு சுதாகரித்துத் தான் கீழிறங்கிய நிலையில், தன்மீது தாக்குதல் நடத்தப்பட்டது எனவும் அவர் கிளிநொச்சிப் பொலிஸாரிடம் கூறியுள்ளார். இந்த விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)

## காய்ச்சல்...

காய்ச்சல் காரணமாக குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கைதடிப் பகுதியைச் சேர்ந்த சாரங்கன் தனுசன் (வயது-34) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
கடந்த 24ஆம் திகதி காய்ச்சல் காரணமாகப் பாதிக்கப்பட்ட அவர், நேற்றையதினம் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## போர்...

வலியுறுத்தியுள்ளார். கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
குறிப்பாக யுத்தம் முடிவடைந்து சுமார் 15 வருடங்கள் கடந்துள்ளன. இப்பொழுது குண்டுச் சத்தங்கள் இல்லை. மாற்றம் வேண்டும் என்றுதான் மக்கள் வாக்களித்துள்ளனர். எனவே, உண்மையான மாற்றங்கள் செய்யப்படவேண்டும். களைகள் பிடுங்கியெறியப்படவேண்டும். கிளிநொச்சி டிப்போ சந்தியில் உள்ள போர் நினைவுச்சின்னம் அகற்றப்பட்டு அந்த இடத்தில் கலாசார மண்டபம் அமைக்கப்படவேண்டும். அங்கு ஆரம்ப காலங்களில் ஒரு கலாசார மண்டபம் இருந்தது - என்றார். (அ-ம-125)

## வவுனியாவில்...

வராவார். இரண்டு இளைஞர்கள் பயணித்த மோட்டார்சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது.
காயமடைந்த மற்றைய இளைஞர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (அ-ம-110)

## 36 வீதமான...

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே, நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கிளிநொச்சி மாவட்டச் செயலக வளாகம், கலாசார மண்டபம் அமைக்கப்பட்டிருந்த காணி, கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பயன்பாட்டுக்கு உகந்த சந்திரன் பூங்காக் காணி உள்ளிட்ட நகர்ப்புறக் காணிகள் பலவற்றை இன்றளவும் இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ளனர். அதேவேளை, நகரின் முதன்மைப் பாடசாலைகளுள் ஒன்றான கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் மைதானத்துக்கான பாதையை விடுவிக்குமாறு கடந்த காலங்களில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட சமநேரத்தில் கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் அது தொடர்பில் ஆராயப்பட்டிருந்தது.
441 ஏக்கர் விஸ்தீரணமுடைய வட்டக்கச்சி அரசினர் விவசாயப் பண்ணையின் 410 ஏக்கர் காணி தற்போதும் இராணுவத்தின் வசமுள்ளது. இதனை விவசாயத் திணைக்களத்திடம் கையளிக்கும் பட்சத்தில் இந்த மாவட்டத்தின் நூற்றுக்கணக்கானோருக்கான வேலைவாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்பதால் பொதுப் பயன்பாட்டுத் தேவைகளுக்குரிய காணிகளை இராணுவத்திடமிருந்து விடுவிக்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்-என்றார். (அ-ம-26-125)

## மார்கழி...

யாழ். வணிகர் கழகம் என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள மார்கழிப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.
(முதல்நாள் நிகழ்வுகள் விவரம் - பக்கம் 04) (ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமி நினைவேந்தல் தொடர்பிலும் புலனாய்வாளர்கள் தீவிர விசாரணை

தெல்லிப்பழை துர்க்காபுரத்தில் அமைந்துள்ள சிற்பாலயம் கலைக்கூடத்தில் நேற்று இடம்பெற்ற நினைவேந்தல் சுனாமி தொடர்பில் பொலிஸ் புலனாய்வாளர்கள் விசாரணை நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
நிகழ்வில் ஏற்பாட்டாளர்களான இளைஞர்களிடமே இவ்வாறு விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளதுடன், அவர்களின் தேசிய அடையாள அட்டைகள் புலனாய்வாளர்களால் ஒளிப்படங்களும் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த சுனாமிச் சிற்பமும் புலனாய்வாளர்களால் ஒளிப்படம் எடுக்கப்பட்டுள்ளது. (ம-66)

# இனப்பரம்பலை மாற்றுவதற்கு அநுர அரசில் இடமில்லை!

## பதற்றத்தை ஏற்படுத்த வேண்டாம் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

கிளிநொச்சி, டிசெ. 27
இனப்பரம்பலை மாற்றும் நடவடிக்கைகளை அநுர அரசாங்கம் ஒருபோதும் முன்னெடுக்காது என்பதுடன், அவ்வாறான நடவடிக்கைகளை ஒருபோதும் ஆதரிக்காது என்றும் அமைச்சர் சந்திரசேகரம் தெரிவித்துள்ளார்.
கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போது, காணிகளை அடாத்தாக ஆக்கிரமித்து வைத்திருப்பதன் மூலமும், காணிகள் தொடர்பில் தெளிவற்ற நிலைப்பாடுகளைப் பின்பற்றுவதன் மூலமும், இங்கு சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளன என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.
இதையடுத்தே, இனப்பரம்பலை மாற்றுவதற்கு அநுர அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது. இவ்வாறான கருத்துகளை முன்வைத்து, அர்த்தமற்ற வகையில் பதற்றத்தை ஏற்படுத்த வேண்டாம் என்று ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும், அமைச்சருமான சந்திரசேகரம் தெரிவித்தார். (ம-26)

# கனேடிய புலம்பெயர் உறவுகள் இலங்கையில் முதலிடவுள்ளனர்

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கைதடி மெயின்றோட்டுடன் 36 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 11/2, 2 பரப்புகளாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- 20 அடிப்பாதையுடன் நிலப்பரப்பு, மேட்டுநிலம், நன்னீரூற்று
- UDA அனுமதி, பிரதேசசபை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும்.
- தரகர் தேவையில்லை.
- பரம்பரை ஆவணம்.
- பார்வையிடும் நேரம் காலை 8.00 முதல் பிற்பகல் 1.00 மணி வரை. பிற்பகல் 3.00 முதல் பிற்பகல் 6.00 மணி வரை

குரு :- 076 069 1105, 076 298 1105

(CS2101) P-1

## காணிகள் விற்பனைக்கு உண்டு

கல்வியங்காடு கட்டப்பிராய் சந்திக்கு அண்மையில் 2 பரப்புக் காணியும், நாவற்குழி சந்திக்கு அண்மையில் 4 பரப்பு காணியும் உடன் விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு: 077 193 3490
Whats App: 077 084 0453

(CS57022) V-1


யாழ்ப்பாணம், டிசெ. 27
கனடாவில் வசித்துவரும் 100 புலம்பெயரிகள் இலங்கையில் முதலிடுவதற்கும், வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வடமாகாணத்தில் முதலீடுகளை மேற்கொள்வதற்குப் பலர் முன்வந்துள்ளனர். நாம் ஆட்சிக்கு வரமுன்னர், 'எம்மால் நாடு திவாலடையும்' என்று பலரும் கூறிவந்தனர். ஆனால், இன்று நாடு நல்லநிலையை நோக்கிச் சென்று கொண்டிருகின்றது. உலக நாடுகள் பலவும் எம்முடன் உரையாடுகின்றன. சர்வதேச வர்த்தகம் பலப்படுத்தப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாகவே கனேடியர்கள் வர்த்தகத்தில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ம-125)

# சிறுமி வன்புணர்ந்து கொலை: சந்தேகநபர் விளக்கமறியலில்

தலைமன்னார் ஊர்மனை கிராமத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 10 வயதுச் சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.
குறித்த சந்தேகநபர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், அவர் பொலிஸ் பாதுகாப்பைத் தகர்த்துத் தப்பிச் சென்றிருந்தார். இந்த நிலையில் அண்மையில் அவர் மீண்டும் கைது செய்யப்பட்ட நிலையில் அவரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (ச-56)

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 03 . 1950



மறைவு 26 . 12 . 2024

**அமரர் செல்லையா செல்வராசா**
**(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)**

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வதிவிடமாகவும் கல்வியங்காட்டை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட செல்லையா செல்வராசா நேற்று (26.12.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலம்சென்றவர்களான இராமநாதன்-சிவகாமி அம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் சிவலோகநாயகியின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக்கணவரும், மயூரன் (இலங்கை வங்கி-மானிப்பாய்), சாகித்தியா (பிரதேச செயலகம் கோப்பாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தர்ஷிகா (பிரதேச செயலகம்-யாழ்ப்பாணம்), தர்ஷாந் (பிரதேச அபிவிருத்தி வங்கி-மன்னார்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஹிருத்திஷா, லிஷ்வா ஆகியோரின் அன்புப் பேரனும் சிவராஜா (மட்டுவில்), இராஜேஸ்வரி (கொடிகாமம்) விக்கினேஸ்வரி (நீர்வேலி), ஞானேஸ்வரி (உடையார்கட்டு), கமலேஸ்வரி (மந்துவில்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


3ம் கட்டை,
வாசிகசாலை வீதி,
கல்வியங்காடு.

தகவல்:
குடும்பத்தினர்
071 856 [illegible]

(CS 2100) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 03 . 1971



மறைவு 26 . 12 . 2024

**ஆறுமுகம் சாந்தகுமார்**
**(சாந்தன் போட்டோ உரிமையாளர்)**

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சாந்தகுமார் அவர்கள் நேற்று (26.12.2024) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம்-பூமணி தம்பதிகளின் அன்பு மகனும் இராமலிங்கம்-சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும் விஜயமாலினியின் (மாலா) அன்புக் கணவரும் யுகப்பிரியன், விதுரன், ஜாதவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று இளங்காடு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல்:
குடும்பத்தினர்

(CR 42630) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

**தோற்றம்**
**04 . 05 . 1940**



**மறைவு**
**28 . 11 . 2024**

**கடந்த 28.11.2024 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த**
**எமது குடும்பத் தலைவர்**

## அமரர் ஆறுமுகம் கனகசிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (26.12.2024) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றதைத் தொடர்ந்து. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (28.12.2024) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

**எங்கள் வாழ்வுக்கு வகைகாட்டி**
**வழி வகுத்த தானைத்தலைவா**
**உங்கள் பிரிவு எமக்கு பேரிழப்பாகினும்**
**இயற்கையின் நியதி அதுவன்றோ**
**நீங்கள் இறைபதமடைந்து**
**நாட்கள் முப்பத்தியொன்றாகினும்**
**நாங்கள் இன்னும் ஆறாத சோகத்தில்**
**துயர் தீராது, மாறாது, மறையாது**



அன்னாரின் மரணச்செய்தி அறிந்து நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்து துயர் பகிர்ந்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டவர்களுக்கும், தொலைபேசி, முகநூல், மின்னஞ்சல் மூலமாக எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்க்கொத்து சாத்தியவர்களுக்கும், இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்துவரும் அன்பு நெஞ்சங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இறுதிக்கிரியைகளின் போது ஒத்துழைப்பு வழங்கிய பாதுகாப்பு அமைச்சு, வான்படை, காவல்துறை மற்றும் அரசியல் பிரமுகர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இராஜ வீதி,**
**சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.**

(CS/29530) J-1

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**மற்றும் உறவினர்கள்.**

செய்தி : 021493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org